# தமிழை மீட்டெடுப்போம்

# Let’s Restore Tamil

***நா. யாதவ் குமார்***
இளங்கலை கல்வியல் முதலாமாண்டு
தமிழ்த்துறை, கதிர் கல்வியல் கல்லூரி
நீலாம்பூர், கோயம்புத்தூர்

**N. Yadav Kumar**
*I[st] Year, UG Education, Tamil Department*
*Kathir College of Education, Neelampur*
*Coimbatore*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ் நம் தாய்மொழி! நம் பெருமைமிகு அடையாளம்தாய்க்கு இணையான நம் உரிமை இலக்கண இலக்கிய பெருமை பெற்ற தொல்மொழிதமிழினத்தில் பிறந்ததற்கு நாம் பெருமை அடைய வேண்டும். ஆனால் இப்பொழுது பிறமொழி ஈர்ப்பினால் தமிழின மக்களே தமிழை பேச கூச்சப்படுகின்றனர். தமிழைப் பற்றியும் தமிழின் பெருமை மற்றும் சிறப்பைப் பற்றியும் நம்மில் பல பேருக்கு விழிப்புணர்வு இல்லாமல் தமிழைப் பற்றி சிந்திப்பதே இல்லை சாதி மதம் என பிரிந்து கிடக்கும் மக்களை இணைக்க நமக்கு இருக்கும் ஒரே வழி நம் தாய்மொழி தமிழ் மட்டுமே. தமிழ் அழியுமே ஆனால் தமிழ் இனமே அழிந்து போகும் ஆகையால் இனி வரும் தலைமுறைக்கு இப்பொழுது இருக்கும் இளம் தலைமுறை தமிழை மீட்டு கடத்த வேண்டும் தமிழை அழிய விடாமல் மீட்டெடுக்க வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும் ஆகையால் தமிழைப் பற்றியும் தமிழின் சிறப்பை பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வு கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச்சொற்கள்:*** *தாய்மொழி, இலக்கணம், இலக்கியம், தமிழின் பெருமை, தொல்மொழி*

## Abstract

*. Tamil is our mother tongue! We should be proud that we were born in the classical Tamil race, which has the glory of grammar and literature, our right to be equal to our proud identity. But now due to the attraction of other languages, the Tamil people are ashamed to speak Tamil. Many of us don’t think about Tamil without awareness of Tamil and the pride and greatness of Tamil. Tamil is the only way we have to connect people who are divided into caste and religion. The purpose of this article is to create awareness among the people about Tamil and the greatness of Tamil, so that tamil will be destroyed but the tamil race will be destroyed and therefore the younger generation will be able to restore tamil to the future generations and we should all unite so that tamil is not destroyed.*

***Keywords:*** *Mother Tongue, Grammar, Literature, Pride of Tamil, Classical Language*

**Citation**

Yadav Kumar, N. “Let’s Restore Tamil.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 109–113.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20327617*

**முன்னுரை**

*கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு*
*முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி* *பு.வெ.மா*

*உலகில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி தமிழ் உலகின் பழமையான உயர்தர செம்மொழி பல மொழிகளுக்கு தாய் ஆகவும் தமிழ் விளங்குகிறது.சிந்து சமய நாகரீகத்திற்கும் முந்தைய நாகரிகமான வைகைக் கரை நாகரீகத்திற்கு தமிழ் தாயாக விளங்குகிறது.*

*பல புலவர்களையும் பல கவிஞர்களையும் பல கவிதைகளையும் பல காப்பியங்களையும் மற்றும் பல புரட்சிகரமான படைப்புகளையும் உலகிற்கு கொடுத்த மொழி உலக உயிருக்கு சமத்துவம் பேணும் உலகப் பொதுமறையாம். திருக்குறளை இவ்வுலகிற்கு தந்த பெருமை தமிழுக்கே உரித்தானது மற்றும் இலக்கண இலக்கியத்தில் வரலாறு படைத்த மொழி பிற மொழிகளில் இல்லாத சொற்கள் மற்றும் எழுத்துக்கள் தமிழில் உள்ளதுபண்பாடு மற்றும் பல பாரம்பரிய கலாச்சாரங்களை உள்ளடக்கிய மொழி தமிழில் உயிரெழுத்து மெய் எழுத்து உயிர்மெய் எழுத்து ஆயுத எழுத்து என ஒவ்வொன்றிற்கும் தனித்தனிகுணங்களையும் சிறப்புகளையும் கொண்ட மொழி இவ்வுலகில் ஒவ்வொரு விஷயங்களையும் ஒரு பொருளுடன் ஒப்பிடுவார்கள். அதுபோல்தான் தமிழை எப்பொழுதும் கடலுக்கு இணையாக ஒப்பிடுவார்கள் எப்படி கடலுக்கு அடியில் நம்மால் நம்ப முடியாத அளவிற்கு. அதிசயங்களையும் ஆச்சரியங்களையும் உள்ளடக்கியுள்ளதோ அதுபோல்தான் தமிழும் தனக்குள் பல ஆச்சரியமான விஷயங்களை உள்ளடக்கியுள்ளது. அதனால் தான் தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியரை ஏழு கடல் நீரையும் ஒரு கைப்பிடி நீராக்கி குடித்தவர் என்று கூறுவார்கள். அப்பேற்பட்ட தமிழை அழியாமல் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.*

**இலக்கண இலக்கியச் சிறப்பு**

*இலக்கணம் இலக்கியம் என்பது தமிழுக்கு உருகொடுத்து அழகு சேர்ப்பது மட்டுமின்றி தமிழுக்கு உயிர் கொடுத்த பெருமையும் இலக்கண இலக்கியங்களுக்கே சேரும். தமிழில் இலக்கண இலக்கியத்தில் முதலில் இலக்கியமே படைக்கப்பட்டது. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்பது மரபு அதன்படி இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பியவர் தொல்காப்பியர். இலக்கியத்தை சீரமைத்து வகைப்படுத்துவதற்காக இலக்கணம் வகுக்கப்பட்டது. இலக்கியம் என்பது இதிகாசங்களையும் வரலாற்றையும் காட்சியாக கொண்டது. அதை சீரமைத்து ஒரு கொடுப்பதற்காக இலக்கணம் வகுக்கப்பட்டது இலக்கண இலக்கியங்களே தமிழ் மொழி உலகில் சில தலைசிறந்த மொழியாக இடம் பிடிப்பதற்கு காரணமாகும்.*

**இலக்கியம் ஐந்து வகைப்படும்**

1. *சங்க கால இலக்கியம்*
2. *காப்பிய கால இலக்கியம்*
3. *பக்தி இலக்கியம்*
4. *சிற்றிலக்கியம்*
5. *தற்கால இலக்கியம்*

*என இலக்கியத்தை ஐந்து காலமாக பிரித்துள்ளார்கள். மேலும் இலக்கியத்தில் உள்ள பத்துப்பாட்டு, கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழிபோன்ற நூல்கள் தமிழுக்கு பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது.*

*அது போலவே இலக்கணத்தையும் ஐந்து வகையாக பிரித்துள்ளார்கள்.*

1. *எழுத்து இலக்கணம்*
2. *சொல் இலக்கணம்*
3. *பொருள் இலக்கணம்*
4. *யாப்பு இலக்கணம்*
5. *அணி இலக்கணம்*

*இந்த ஐந்து இலக்கணங்களே இலக்கியத்தினை சீரமைக்கும் கருவியாக செயல்படுகிறது.*

*மற்ற மொழிகளில் இல்லாத இலக்கண இலக்கிய சிறப்பு தமிழ் மொழியில் மட்டுமே உள்ளது.அதுபோலவே பக்தி இலக்கியத்தில் இத்தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியரை இவ்வுலகில் உள்ள அனைத்து தெய்வங்களின் எடைக்கும் சமம் என பெருமையுடன் கூறியிருப்பார்கள். தமிழ் எந்த அளவிற்கு பெருமைக் கூறியது என்பது தமிழ்பயின்ற அனைவருக்கும் நிச்சயமாகதெரிந்திருக்கும்.*

*இலக்கணத்தில் அகத்தியம், தொல்காப்பியம், இறையனார் காவியம், புறப்பொருள் வெண்புமாலை, அபிநயம், காக்கை பாடினியம், நத்தத்தம், பல்காயம், மயேச்சுவரம், யாப்பெருங்காளம், வீரச்சோழியம், நேமிநாதம், பண்ணிரு பாடல், போன்ற பல சிறப்பு இலக்கண நூல்களை உள்ளடக்கியுள்ளது. இந்த இலக்கணம் இலக்கியம் என்பது நுட்பமான அறிவியல் கோட்பாடுகளையும் உள்ளடக்கிய தலைசிறந்த நூலாகும்.*

**தமிழின் அறிவியல் பார்வை**

*இவ்வுலகில் அறிவியல் வளர்ச்சி அடைவதற்கு முன்பாகவே விஞ்ஞானத்தை துல்லியமாக கணித்து நம் முன்னோர்கள் செயல்பட்டு வந்ததை நம் தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறது.*

***அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்***
***அளப்பெரும் தன்மை வலப் பெருங் காட்சி***
***ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்***
***நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன***
***இல்நுழைக் கதிரின் துன் அனுப் புரையச்***
***சிறிய ஆகப் பெரியோன் தெரியின்.***

***03திருவாசகம் திருவண்டப் பகுதிஎட்டாம் திருமுறை***

*என்று உலகம் உருவான விதத்தையும் அதில் பல கோடி கணக்கான பிரபஞ்சங்கள் இருப்பதையும் அது செயல்படும் விதத்தையும் அதை அளக்க முடியாத அளவிற்கு அது விரிந்திருக்கும் நிலையையும் துல்லியமாக திருவாசகத்தில் மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.*

***அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு*** ***குறள் எண் -01***

*என்னும் குரலில் இவ்வுலகம் உருவாக காரணமான பெருவெடிப்பை பற்றி திருவள்ளுவர் கூறியுள்ளார். மேலும் சுழன்றும் ஏற்பின்னது உலகு என்று பூமி சுழலும் விதத்தைப் பற்றியும் கூறியுள்ளார். இப்படி தமிழில் பல நூல்களில் உலகம் உருவான விதங்களைப் பற்றியும் கிரகங்கள் சூழலும் தகவமைப்பு பற்றியும் விண்வெளி சார்ந்த பல விஷயங்களை தமிழ் கூறி உள்ளது. அது மட்டுமல்லாமல் இனி வரும் காலத்தில் ஏற்படும் நோய்கள் பற்றியும் அதை தீர்க்கும் வழிமுறைகள் பற்றியும் தமிழில் பலவிதமான நூல்களில் கூறப்பட்டுள்ளது.*

*அள்ள அள்ள குறையாத கடல் நீரை போல் தோன்ற தோன்ற பெருகிக்கொண்டே இருக்கும். ஊற்றினை போல் தமிழ் எண்ணில் அடங்கா கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது.*

***சோற்றில் முழு பூசணிக்காயை மூடி மறைப்பது***

***பழமொழி : புலியூர்கேசிகன்***

*ஆகையால் தான் தமிழைப் பற்றியும் தமிழில் உள்ள விஞ்ஞானம் மெய்ஞானம் பற்றி அறிந்த பல வெளிநாட்டவர்கள் தமிழை மறைக்க துடிக்கின்றனர்.*

**தமிழின் அவசியம்**

*தமிழ் என்பது ஆராய்ச்சி மொழி அல்ல அனுபவ மொழியாகும். தமிழில் கூறப்பட்டுள்ள பல விஷயங்களைக் கண்டு இன்னும் பல வளர்ச்சி அடைந்த நாடுகளே வியப்படையும் வகையிலேயே இருக்கின்றது.*

***யாதும் ஊரே யாவரும் கேளிர்*** *புறநானூறு - 192*

*என்று கணியன் பூங்குன்றனாரார் உலகிற்கே தமிழினத்தின் அன்பையும் பாசத்தையும் பறைசாற்றிய மொழிதமிழ்என்பதைநாம்வெறும்பேச்சுமொழியாகமட்டும்சொல்லிவிடமுடியாதுதமிழில்உள்ள பல கருத்துக்கள் நமக்கான வாழ்க்கை வழிமுறைகளையும் நாம் சிறந்து விழங்குவதற்கான வழிகளையும் நமக்கு கற்றுகொடுக்கும் விதத்தில் அமைந்துள்ளது. தமிழ் மொழி நம்வழிகாட்டியாகவும் இருக்கின்றது.  எந்த நிலத்தில் எதை விவசாயம் செய்ய வேண்டும். எந்த நிலத்தில் எதை விவசாயம் செய்யக்கூடாது. என்றும் அதை எந்த காலத்தில் விதைக்க வேண்டும். எந்த காலத்தில் அறுவடை செய்ய வேண்டும். என்றும் எந்த திசையில் காற்று  வீசினால் எந்த திசையில் மழை வரும் என்றும் நீரோட்டம் கண்டு கடல்வழிப் போக்குவரத்துகளையும் திறன்பட அறிந்து புரிந்து செயல்பட்டு வந்தனர். நம் தமிழ் முன்னோர்கள் தன் நாடு மட்டும் இன்றி பிற நாடுகளுக்கும் விவசாயத்தினை கற்றுக் கொடுத்த இனம் நம் தமிழ் இனமாகும். நம் வாழ்க்கையில் சிறந்து விளங்குவதற்காகவும் நம் வாழ்வில் திறன் படை செயல்படுவதற்காகவும் நம் முன்னோர்களால் விட்டுச்செல்லப்பட்ட வழிகாட்டியே நம்தாய் தமிழாகும். எண்ணிலடங்கா இலக்கண இலக்கியச் சிறப்புகளையும் பாடல்களையும் உள்ளடக்கிய நூல்தமிழில் உள்ளது. ஒவ்வொரு எழுத்துக்களிலும் கவிதைகளைக் கொண்ட நூல் இத்தகைய பெருமைகளை உள்ளடக்கிய நாம் தாய் தமிழ் நூல் நம் வாழ்வின் அவசியமாகும். ஒருவேளை நாம் தமிழை இழப்போமேயானால் நம் வாழ்க்கையை இழக்கும் நிலை நிச்சயமாக நமக்கு உருவாகும். இன்னொருவருக்கு நாம் அடிமைப்பட்டு வாழும் நிலை நிச்சயமாக நமக்கு உருவாகும். மேலும்அறிவியல்தமிழில்உள்ளஎதையெல்லாம்முடநம்பிக்கைகள் என்றுகூறியதோ இப்பொழுது அறிவியல் நுட்பத்தினால் அதை எல்லாம் சத்தியம் என்று அவர்களே மீண்டும் கூறுகின்றனர். இத்தகைய பெருமைமிகக்க மொழி நம் தமிழ் மொழியாகும். இத்தகைய இலக்கண இலக்கிய வழமை பெற்ற நம் மூத்த தாய்மொழியை காப்பது நம் கடமையாகும்.*

***மற்றவர்களுக்காக விட்டுகொடுப்பது***
***தவறல்ல ஆனால் மற்றவரிடத்தில் தன்***
***தாய் மொழியை விட்டுகொடுப்பதை - விட***
***அவமானத்திற்குரியது வேறு எதுவாகவும் இருக்க முடியாது***

**முடிவுரை**

*சாதி மத இனமாக பிரித்துக் கொள்வதற்கு முன்பாகவே ஒரு தாய்க்கு குழந்தையாக வீர தமிழனாக மான தமிழச்சியாகவே நாம் பிறக்கின்றோம். ஈன்ற தாயை முதல் முறையாக தாய் மொழியால் தான் அம்மா என்று அழைக்கின்றோம். ஈன்ற தாய்க்கும் பெயர் கொடுத்த நம் மூத்த தாய் தமிழினை ஒருபோதும் மறவாது ஒன்று சேர்ந்து காப்போம். வாருங்கள்.*

***வாழ்க தமிழ் வளர்க தமிழ்நாடு***

**துணை நின்ற நூல்கள்**

1. திருவாசகம் - முனைவர் சாது சு. ஸ்ரீனிவாஸ்
2. தமிழ் இலக்கியத் தகவல்களஞ்சியம் -முனைவர் இராசேந்திரன்
3. தமிழ் இலக்கணம் -முனைவர் இராசேந்திரன்.
4. தமிழ் இலக்கிய வரலாறு -முனைவர் பூ வண்ணன்.

**References**

1. *Sadhu Su. Srinivas, Thiruvasagam.*
2. *Rajendran Dr, Encyclopedia of Tamil Literature.*
3. *Rajendran Dr, Tamil Grammar.*
4. *Poovannan Dr, History of Tamil Literature.*